THIRU K. M. SUBRAMANIAM : Is the Government aware that in the Government plots allotted on lease basis to the people, they are not able to construct any pucca houses because of non-issue of pattas? They are on lease basis till now and for many years they are on lease basis. Will the Government now think of giving pattas to those people who have been allotted developed plots on lease basis?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அது நிலத்தின் இடத்தைப் பொறுத்திருக்கிறது. சிலயிடங்கள் அரசுக்குத் தேவை என்ற காரணத்தினுல் அடமானம் செய்யமுடியாத காரணத்தினுல் வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. அப்படி விடப்பட்டிருக்கிற இடங்களை பட்டா செய்து கொடுக்கும் உத்தேசம் இப்போது அரசாங்கத்தினிடம் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல்: சென்னை மாநகரில் லீஸ்-கம்-சேல் என்ற அளவில் 124 இடங்கள்தான் இருக்கின்றன. அவைகளைப் பற்றிய சட்டமுறைகளை எல்லாம் ஆராய்ந்து ஒரு முடிவிற்கு குடிசை வாரியம் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்த விவரத்தை மற்ற உறுப்பினர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்.

MR. SPEAKER : Is he answering or putting a question? He is answering in the question from. I think.

THIRU K. M. SUBRAMANIAM : Is the Government aware that there are about 4,000 to 5,000 Government—developed plots allotted to people on rental basis in Madras City by the Housing Board and they are not yet sold to these people in spite of various demands and because of that they are not able to construct pucca houses? Is the Government. . . .

MR. SPEAKER : This does not concern the Minister.

பெரியார் இராமசாமியவர்கள் பிறந்த நாள்

*46 வினு.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா?

பெரியார் இராமசாமி அவர்களின் பிறந்த நாளை அரசாங்க விடுமுறை நாளாக அறிவிக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இல்லை.

திரு. நா. வீராசாமி: பெரியார் அவர்கள் இந்த நாட்டில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியிருக்கிறார்கள். விடுமுறை அளிக்காவிட்டாலும் ' காம்பன்ஸேட்டரி ஹாலிடே ' என்று அந்த நாளில் விடுமுறை அளித்துவிட்டு 'செகன்ட் சாட்டர்டேயை வொர்க்கிங் டே' ஆக ஆக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பெரியார் அவர்கள் ஓய்வின்றி உழைப்பதையே விரும்புகிறவர்கள். ஆகவே இதை அவர்களே விரும்ப மாட்டார்கள்.

திரு. கோவை செழியன் : பெரியார் அவர்களும் அவருடைய உண்மை மாணாக்கருமான அறிஞர் அண்ணா அவர்களும் இந்த நாட்டுக்கு குறிப்பாக தமிழ்நாட்டிற்குச் செய்திருக்கிற சேவை இந்த நாடு உள்ளளவும் மறக்க முடியாத ஒன்றாகும். ஆகவே அவரது பிறந்த நாளை ஒரு நாஷனல் டேயாக 'லெனின் டே' என்பது போல் இதை 'நாஷனல் டே' ஆக அறிவித்து, ஆண்டுக்கு ஒருமுறை அதைக் கொண்டாடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்திய தேசத் தலைவர்களைப் பொறுத்தவரையில் கூட மகாத்மா காந்தி பிறந்த நாளுக்கு மாத்திரந்தான் இப்போது விடுமுறை அளிக்கப்பட்டுவருகிறது. ஆகவே இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டு அதை அரசாங்கம் மறுத்ததைப்போல் ஒரு நிலையை உண்டு பண்ணுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பெரியார் அவர்கள் தமிழ் நாட்டு மக்களுக்கும் பொதுவாக இந்திய மக்களுக்கு இடையே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது அநேகமாக எல்லாராலும் இன்று ஒத்துக்கொள்ளக் கூடிய ஒரு விஷயமாகும். ஆகவே அவர்களது பிறந்த தினத்தை விடுமுறை தினம் என்று இல்லாமல் போனாலும் கூட அவர்களது பிறந்த தினத்தையொட்டி ஏதாவது பரிசுகள்—கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் என்று இப்படிப்பட்ட காரியங்களுக்கு பரிசுகள்—வழங்கக்கூடிய ஆலோசனையைப் பற்றிக் கவனிக்குமா அரசாங்கம் என்று அறிய விரும்புகிறேன். காரணம், பெரியார் அவர்களது பிறந்த தினத்தைப் பற்றி தமிழக மக்கள் பூராவும் கவனம் செலுத்துகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டதொரு நிலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது செய்வதற்காகத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒருமுறை அண்ணா அவர்கள் இந்த அவையில் இந்த அமைச்சரவையே பெரியார் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பரிசுதான் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் யோசனை உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு. பெ. மலைச்சாமி : பெரியார் அவர்களின் பிறந்த நாள் விழாவை விடுமுறை நாளாக்குவதற்கு, விடுமுறை நாளாகக் கொண்டாடுவதற்கு எதிர் கட்சிக்காரர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். எனவே இதை அரசாங்கம் மீண்டும் பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லா எதிர்கட்சிக்காரர்களும் ஒத்துக்கொண்டதாக இப்போது தெரியவில்லை. ஒருவேளை அவர்கள் மௌனமாக இருப்பதிலிருந்து ஒத்துக்கொண்டதாக நான் புரிந்துகொள்கிறேன். பெரியார் அவர்களது பிறந்த நாளில் எப்படி தமிழக மக்களின் எண்ணங்கள் பதியத்தக்க விதத்தில் காரியங்கள் செய்யலாம் என்பதைப் பற்றி அரசு பிறகு யோசிக்கும்.

திரு. எம். ஏ. லத்தீப் : பெரியார் அவர்களது பிறந்த தின விழாவை நம்முடைய நாட்டின் முக்கியமான தினமாகக் கொண்டாடுவதில் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்றாக இருக்கிறார்கள் என்பதை முதல் அமைச்சர் அவர்களிடத்

தில் தெரிவித்துக்கொள்கிறேன். குறைந்தபட்சம் பெரியார் அவர்களது ஒரு ஸ்டாம்பாவது மத்திய அரசினால் பதிக்கப்படவேண்டுமென்று இந்த அரசு பரிந்துரை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பெரியார் அவர்களுடைய தபால் தலை வெளியிடவேண்டுமென்று கேட்கவேண்டிய நேரத்தில் இந்த அரசு கேட்கும். அதை மத்திய அரசும் ஒப்புதல் அளித்து வெளியிடும் என்று கருதுகிறேன்.

திரு. என். கணபதி: பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழகத்தின் தேசிய சின்னங்கள் என்று பெரியார் அவர்களைப் போன்றவர்களை வர்ணித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தேசிய சின்னங்களைக் கௌரவிப்பதற்கு இந்த அரசு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தேசிய சின்னங்களை இந்த அரசு என்றைக்கும் அகௌரவித்தது கிடையாது.

திரு. கா. காளிமுத்து: வ.உ.சி.-யின் நூற்றாண்டு விழா தினத்தை தேசிய விடுமுறை தினமாக ஆக்க உத்தேசித்திருப்பதுபோல் பெரியார் அவர்களது நூற்றாண்டு தின விழாவையும் விடுமுறை நாளாக, விடுமுறை தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நிச்சயமாகச் செய்யும்.

திரு. மு. சுருளிவேல்: தந்தை பெரியார் அவர்களது பிறந்த தினத்தை சீர்திருத்த நாளாகக் கொண்டாடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் முதலிலேயே இதற்கான பதிலைச் சொல்லியிருக்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் நிலமற்றவர்களுக்கு நிலங்கள்.

* 57 வினா—**திரு. கு. அ. பொம்மன்:** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967 மார்ச் மாதத்திலிருந்து 15—12—69-ம் தேதி முடிய நீலகிரி மாவட்டத்தில் நிலமற்றவர்களுக்கு ஏதேனும் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், எவ்வளவு நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) 15.78 ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. கு. அ. பொம்மன்: நீலகிரி மாவட்டத்தில் யாருக்கும் நிலம் கொடுக்கக் கூடாது என்று தடை உத்தரவு இருப்பது அரசுக்குத் தெரியுமா? அந்தத் தடை உத்தரவை நீக்கி ஏழை ஹரிஜனமக்களுக்கு நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலங்கள் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நீலகிரி மாவட்டத்தில் இருக்கிற நிலத்தை அப்படி யாருக்கும் அடைமானம் செய்யக்கூடாது என்று ஒரு தடை உத்தரவு பொதுவாகப் போடப்பட்டிருக்கிறது. ஆனால் மாவட்ட ஆட்சிமன்றத்